DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.198 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஹபிபுல்லா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.காதர்முகைதீன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 14.05.2026

---

1. நான் தற்போது திருவாடானை அனிஷ்நகரில் குடியிருந்து மளிகை கடை வைத்துள்ளேன். அ.சா.1 எனது மனைவியின் தங்கை. .கடந்த 08.05.2025 தேதி காலை10.15 மணியளவில் நானும் அ.சா.1 ம் சிவா என்பவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அவ்விடத்தில் கூட்டமாக சில நபர்கள் சத்தம்போட்டு கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ சில நபர் அ.சா.1 யை கீழே தள்ளியதில் அவருக்கு வலதுகை மணிகட்டுக்கு மேல் காயம் ஏற்பட்டது. அ.சா.1 எழுந்து பார்த்தபோது அங்கு சற்று தூரத்தில் ஆஜர்எதிரி

இருந்ததால் . அவர்தான் தன்னை கீழே தள்ளி காயம் ஏற்படுத்தினார் என்று சந்தேகத்தின் பேரில் எதிரிமீது நடவடிக்கை எடுக்க கோரி தொண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரணைசெய்தார்கள்,

(சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.கடந்த 07.05.2025 தேதி மதியம் 15.30 மணியளவில் நான் இருசக்ரவாகனத்தில் வரும்போது ஆஜர்எதிரி அவரதுஓட்டி வந்த வண்டியால் முட்டுவதுபோல வந்து என்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிசென்றதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 08.05.2025 தேதி காலை 10.15 மணியளவில் நான் அனிஷ் நகரில் உள்ள சிவா என்பவர் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த ஆஜர் எதிரி என்னை முறைத்து கொண்டு வந்ததார் அதை பற்றி என்னிடம் கேட்டபோது சாட்சி2 யை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவருடன் கட்டி உருண்டு சண்டை போட்டதாகவும் அங்கிருந்த சிராசுதின், காதர்மைதீன், சகாபுதின் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டவுடன் ஆஜர்எதிரி வீட்டிலிருந்து கத்தி எடுத்து வந்து என்னை தாக்க வந்ததாகவும் அதை அ.சா.1 தடுத்தபோது அவருக்கு வலதுகை மணிகட்டில் காயம் ஏற்பட்டதகாவும் எதிரி அங்கிருந்து செல்லும்போது அனைவரையும் கொன்று விடுவதாக மிரட்டிவிட்டு சென்றதாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்ககோரி தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அ.சா.1 சிகிச்சையில் இருந்த போது அங்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல., எதிரியுடன் சமாதனமாக செல்வதாக சமரச மனு தாக்கல் செய்துள்ளேன் எனறால் சரிதான். சம்பவம் பற்றி போலிசார் விசாரணையில் நடவடிக்கை எடுக்க கோரி அ.சா.1 புகார் வாக்குமூலம்

அளித்துவிட்டு தற்போது ஆஜர் எ திரி உங்களுக்கு தெரிந்தவர் என்பதால் அவருடன் சமரசமாக செல்வதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.